Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(~~Under Section 154 Cr.P.C.~~)
(~~கு.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)

C 8129898

1. District : சேலம் மாவட்டம் | PS: ஊ.த.க.பிரிவு காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 1/2025 மு.த.அ. எண் | Date: 31.01.25 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : 27.01.2025 நாள் முதல் | Date to : நாள் வரை

Time Period : நேர அளவு | Time from : 15.30 hrs நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.01.2025 | Time : நேரம் 07.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL - I | Time : நேரம் 07.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 50 km, தென் மேற்கு

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி BMM அலுவலகம், சேலம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் செளந்தர்யா | (b) Father's/ Husband's Name : ~~தந்தை~~ / கணவர் பெயர் ஆனந்தராஜ்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 25 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் சமையல் பொறுப்பாளர் | (g) Address : முகவரி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, மாந்தக்கொல்லை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

செந்தமிழ்செல்வி, BMM.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வழியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S. [illegible] Rank ....../ காவல் ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS ஊ.த.த பிரிவு, கடலூர் on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு A. Soundharya

Signature of the Officer in-charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலர் ஒப்பம்
31/1/25

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
31·01·2025 at 09·05 hrs

Name: பெயர் S. சுந்தரராஜ்
Rank: நிலை காவல் ஆய்வாளர் ....No. எண் ..........
ஊ.த.த பிரிவு, கடலூர்

கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 1/2025, u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் Column 12.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

அனுப்புநர் சௌந்தர்யா, வயது 25, க/பெ ஆனந்தராஜ், காலை சமையல் பொறுப்பாளர், ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி. மஞ்சக்கொல்லை. செல்.9345558535. பெறுநர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர். அய்யா, நான் மஞ்சக்கொல்லை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் சமையல் பொறுப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 09.01.2025 ந்தேதி காலை 09.30 மணியளவில் மஞ்சக்கொல்லை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் இருந்தபோது கடலூரில் இருந்து துணை ஆட்சியர் திருமதி.ராணி அவர்கள் எங்கள் பள்ளிக்கு வந்து காலை உணவு திட்டத்திற்காக வழங்கப்பட்ட சமையல் பொருட்களின் இருப்பு குறித்து ஆய்வு செய்தனர். ஆய்வின் போது என்னிடம் சேமியா எத்தனை கிலோ உள்ளது என்று கேட்டார். நான் அவரிடம் 9 கிலோ இருப்பதாக சொன்னேன். அதனை அவர் குறித்துக்கொண்டு ஆய்வு முடித்து சென்றுவிட்டனர். அவர்கள் சென்ற பிறகு நான் பொருட்களை சரிபார்த்ததில் சேமியா 14 கிலோ இருந்தது. ஆனால் நான் ஆய்வின் போது அதிகாரியிடம் வாய் வார்த்தையாக தவறுதலாக சேமியா 9 கிலோ இருப்பதாக சொன்னதை தெரிந்துகொண்டேன். இந்நிலையில் 27.01.2025 ந்தேதி மாலை சுமார் 3 மணி அளவில் BMM செந்தமிழ்செல்வி என்பவர் என்னை மிராலுர் அலுவலகத்திற்கு வந்து பார்க்க சொன்னார். அவர் சொன்னபடி நான் அன்றே மாலை 3.30 மணியளவில் BMM செந்தமிழ்செல்வியை சென்று பார்த்தபோது எனக்கு எதிராக கடலூரில் இருந்து Report வந்திருப்பதாகவும் அதில் சேமியா அளவில் குறைவு உள்ளதாகவும் எனக்கு எதிராக நடவடிக்கை எடுக்க BMM-மிடம் அறிக்கை கேட்டிருப்பதாகவும் சொன்னார். நான் BMM செந்தமிழ்செல்வி அவர்களிடம் ஆய்வின்போது நடந்த விபரத்தையும் என்மேல் எந்த தவறும் இல்லை என்பதையும் சொன்னேன். அதற்கு செந்தமிழ்செல்வி "அதை பற்றியெல்லாம் எனக்கு தெரியாது, உனக்கு எந்த பாதிப்பும் வராமல் அறிக்கை கொடுக்க வேண்டும் என்றால் ரூ.2,000/- கொடு" என்று கேட்டார். நான் அவரிடம் ரூ.2,000/- அரசுக்கு செலுத்த வேண்டிய இழப்பீடு பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் எனக்கு சாதகமாக அறிக்கை அனுப்புவதற்காக அவருக்கு கொடுக்க வேண்டிய பணம் என்று சொன்னார். மேலும் பணம் கொடுக்கவில்லை என்றால் எப்படி அறிக்கை எழுத வேண்டுமோ அப்படி

31/1/25

எழுதி என்னை வேலையை விட்டு தூக்கி விடுவேன் என்று மிரட்டினார். வேறு வழியில்லாமல் நான் அவரிடம் லஞ்சப்பணத்தை குறைக்குமாறு கெஞ்சியபோது, அவருக்கு கொடுக்க வேண்டிய லஞ்சப்பணத்திலிருந்து ரூ.500/-ஐ குறைத்துக்கொண்டு ரூ.1,500/- தருமாறு சொன்னார். நான் அவரிடம் என் கணவரிடம் பேசிவிட்டு வருவதாக கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்பு வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில் செய்யாத தவறுக்காக லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே செய்யாத தவறிற்காக என்னை வேலையை விட்டு தூக்கிவிடுவதாகவும், எனக்கு சாதகமாக அறிக்கை அனுப்புவதற்கு லஞ்சம் கேட்ட BMM செந்தமிழ்செல்வி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் கொடுக்கலாம் என்று திட்டமிட்டேன். சென்ற வாரம் இறந்துபோன எனது பெரிய மாமியாருக்கு 29.01.2025 ம் தேதி எட்டாந்துக்கம் படைக்க வேண்டி வேலைகள் இருந்ததால் உடனடியாக வந்து என்னால் புகார் கொடுக்க முடியவில்லை. அதனால் நான் இன்று 31.01.2025 ம் தேதி தங்களிடம் புகார் மனு கொடுக்கிறேன். மேலும் BMM செந்தமிழ்செல்வி கேட்ட லஞ்சப்பணம் ரூ.1500/- கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம்.xxxxxxx) 31.01.2025.

Sir,

Received the above computer typed complaint on 31.01.2025 at about 07.00 hrs., and preliminary verification was made on the genuineness of the complaint through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.1/2025, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 31.01.2025 at 08.30 hrs., sd/-xxxxx 31/01/2025 (S.Sundraraj), Inspector of Police, V & AC, Cuddalore.

இதன் அசலை வாதியின் புகார் மனுவுடன் இனைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு வழக்குகள் நீதிமன்றம் அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

31/1/25

(S.Sundraraj)
Inspector of Police,
V & AC, Cuddalore.